
கால்நடை





கிளை நூலகம்
கஞ்சம்பட்டி





100Rs




S.சௌந்தரராஜன் கஞ்சம்பட்டி

எண் 4383
தேதி 16.11.2000
ரூபாய் 100

N. Manimekalai
N. மணிமேகலை
ஸ்டாம்பு வெண்டர்
5/97. கோமங்கல...
தமிழ்நாடு.

தானசெட்டில்மெண்ட் ஆவணம்

(16.11.2000) இரண்டாயிரம் ஆண்டு நவம்பர் மாதம் பதினாறு தேதியில்

கோயமுத்தூர் மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்காக மாவட்ட நூலக அலுவலர் அவர்களுக்கு (தற்கால மாவட்ட நூலக அலுவலர் திரு. ஆர்.வி.சண்முகசுந்தரம் M.A.B.L.ISC அவர்களுக்கு)

பொள்ளாச்சி வட்டம் கஞ்சம்பட்டி கிராமத்தில் வசிக்கும் கொங்கு வேளாளர் ஜாதி வேளாண்தொழில் சிவசாமிக்கவுண்டரின் குமாரர் எஸ்.சௌந்தரராஜன் ஆகிய நான் எழுதி வைத்துக் கொடுத்த பொது மக்கள் நலனுக்காக நூலகம்கட்டுவதற்கான காலி இடம் தானசெட்டில் மெண்ட் ஆவணம் என்னவென்றால்

2303

1 புத்தகம் 200௦ ஆவணம்
... 5 .. தாட்களைக் கொண்
சார்பதிவாளர்.

நவம்பர்
200௦ ... நாள் 16 நாள்
1 ... 2 ... சேர்க்கலம்
சார்பதிவாளர் ... செய்து
... ரூ 22/ ... செலுத்தியவர்,

ஒப்புக்கொடுத்ததாக ஒப்புக்கொண்டவர்

இடது பெருவிரல்

சிவசாமிக்கவுண்டர் மகன்
பயர் கஞ்சம்பட்டி (கி)
பொள்ளாச்சி (வ)

இனம்தெரிந்து குறித்தவர்கள்

P Kaliappan S/o. Peria Marimuthu Gounder - Nambiamuthur, Kanjampatty P.O. (Agri.)

A. தெண்டபாணி S/o ஆறுமுகச்செட்டியார் - கஞ்சம்பட்டி
நவம்பர் 16 வியாபாரம்.

200௦ம் ஆண்டு ... திங்கள் 16 நாள்

சார்பதிவாளர்.

1 புத்தகம் 917 தொகுதி
103 முதல் 106 வரை பக்கங்களில்
2000 ... 2303 ம்
எண்ணாக ... செய்யப்பெற்றது.
2000 ... நவம்பர் ...
திங்கள் ... 17 நாள்.

சார்பதிவாளர்.

கடந்த 22.10.1980 தேதியில் கீழ்க்காணும் இடத்தையும், வேறு இடத்தையும் சேர்த்து நானும் மற்றும் ஆர்.சண்முகசுந்தரக்கவுண்டர் என்பவரும் சேர்ந்து கூட்டாக கிரையத்திற்கு வாங்கி டை ஆவணம் கோமங்கலம் சார் பதிவகம் 1 புத்தகம் 561 தொகுதி 351 பக்கத்தில் 1980 ஆம் ஆண்டு, 1005 எண்ணாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. டை கிரைய ஆவணத்தின்படி எங்கள் இருவருக்கும் கூட்டாக பாத்தியப்பட்ட இடத்தை நானும் டை சண்முக சுந்தரக்கவுண்டர் அவர்களும் வாய்மொழியாக பாகம் பிரித்து அனுபவித்து வருவதின்படி கீழ்க்காணும் சொத்துக்கள் என் பாகத்திற்கு பிரிந்து நான் என் சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறேன்.

மேற்கண்டவாறு நான் என் சுவாதீனத்தில் வைத்து சர்வ சுதந்திர பாத்தியங்களுடன் அனுபவித்து வரும் கீழ்க்காணும் சொத்துக்களை கிராம பொதுமக்கள் நலனுக்காக கிளை நூலகம் கட்டுவதற்காக நான் எவ்வித பிரதிப்பிரயோஜனமும் பெற்றுக் கொள்ளாமல் இந்த ஆவணத்தின் மூலம் தானமாக கொடுத்து கீழ்க்காணும் சொத்துக்களையும் நான் இன்றே டை மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்காக உங்கள் சுவாதீனத்தில் ஒப்படைத்து விட்டேன்.

இனிமேல் கீழ்க்காணும் இடத்தில் டை மாவட்ட நூலக ஆணைக்குழு தன் சௌகரியம் போல் கட்டிடம் கட்டி நூலகம் நடத்தி வரவேண்டியது. கீழ்க்காணும் சொத்தை நான் முழு மனதுடன் தானமாகக் கொடுத்துள்ள படியால் இனிமேற்கொண்டு கீழ்க்காணும் சொத்தைப் பொறுத்து எனக்காவது என் வாரிசுகளுக்காவது எந்தவிதமான பாத்திய சம்பந்தமும் பின்தொடர்ச்சி யும் இல்லை எனவும் கீழ்க்காணும் சொத்தினை நான் எந்தவித வில்லங்க விவகாரங்களுக்கும் உட்படுத்தவில்லை எனவும் இந்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை நான் எக்காரணத்தை முன்னிட்டும் மாற்றுவதோ ரத்து செய்வதோ இல்லை எனவும் அவ்வாறின்றி மாற்றினாலும் ரத்து செய்தாலும் அது செல்லத் தக்கதல்ல எனவும் இதன்மூலம் உறுதிமொழி கூறுகின்றேன். கீழ்க்காணும் இடத்தை பொதுமக்கள் நலனுக்காக வேண்டி நூலகம் அமைக்க தானமாக கொடுத்துள்ளேன். இப்படிக்கு நான் என் பூரண மனச் சம்மதத்துடன் எழுதி வைத்துக் கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம்.

கீழ்க்காணும் இடத்தின் பட்டா ஸ்ரீ மாவட்ட நூலக ஆணைக் குழுவின் பெயருக்கு மாறுதலாக இத்துடன் பட்டா மாறுதல் மனுவும் கொடுத்துள்ளேன். இந்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் அரசு உத்தரவு எண் 455/1983 நாள் 23.4.1983ன்படி Nominal மதிப்பு ரூ.100.00 ரூபாய் நூறு என மதிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது.

சொத்தின் விபரம்
-------------

திருப்பூர் பதிவு மாவட்டம் கோமங்கலம் சார்பதிவு மாவட்டம் பொள்ளாச்சி வட்டம் கஞ்சம்பட்டி கிராமபுலம் க.ச.236/3 (இருநூற்று முப்பத்தாறு/மூன்று ) நெ. காலை பு.ஏ.3.16 மூன்று ஏக்கர் பதினாறு செண்ட் இதில் கிழகோடு தென்வடலாக சண்முகசுந்தரம் காலனியில் சுமார் 30 செண்டில் அப்டேட்டிங் சர்வேப்படி க.ச.236/3ஈ (இருநூற்று முப்பத்தி ஆறில் மூன்று ஈ) நெ. காலையான

முத்துக்குமாரசாமி மனைவி நளாயினி இடத்துக்கும் --- வடக்கு

அப்டேட்டிங் சர்வேப்படி க.ச.236/4ஈ
236/3எப் நெ. காலை 4 மீட்டர்
அகலத்தில் உள்ள தென்வடல் வண்டிப்பாதைக்கும் --- மேற்கு

அப்டேட்டிங் சர்வேப்படி க.ச.236/3ஏ2 நெ
காலை அரசமருத்துவமனை குடியிருப்பு காலி
இடத்துக்கும் -- கிழக்கு

அப்டேட்டிங் சர்வேப்படி க.ச.236/3டி நெ
காலையில் சண்முகசுந்தரக்கவுண்டர் காலி
இடத்துக்கும் -- தெற்கு

இதன்மத்தியில் வடபுறம் கிழமேல் 19.2 மீட்டருக்கு அடி $63\frac{1}{2}$ (அறுபத்தி மூன்றரை) அடி தென்புறம் கிழமேல் 19.2 மீட்டருக்கு அடி $63\frac{1}{2}$ (அறுபத்தி மூன்றரை) அடி மேல்புறம் தென்வடல் 9.2 மீட்டருக்கு அடி $30\frac{1}{4}$ (முப்பதே கால்) அடி கிழபுறம் தென்வடல் 9.4 மீட்டருக்கு அடி 31 (முப்பத்தொரு அடி) இந்த அளவுகள் உள்ள 1945 ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தைந்து சதுரடி அளவுள்ள சுமார் 5 செண்ட் இடமும் ஸ்ரீ இடம் தற்போது அப்டேட்டிங் சர்வேப்படி க.ச.236/3டி நெ. காலையில் ஓர் பாகம் இந்த இடமும் ஸ்ரீ இடத்துக்கு ஸ்ரீ காலனிக்காக ஸ்ரீ காலையில் கிழகோட்டில் தென்வடலாக கிழமேல் 16 அடி அகலத்தில் விடப்பட்டுள்ள தென்வடல் தடத்தில் ஜனங்கள், கால்நடை, வண்டி, லாரி, டிரேக்டர் டிரெய்லர் மற்றும் நவீன கனரக வாகனங்களும் போகவர உள்ள நடபாத்தியமும்

பின்னும் பொள்ளாச்சி செல்லப்பம்பாளையம் ஹைறவேய்ஸ் ரோட்டிலிருந்து டீக்கடை கந்தசாமிசெட்டியார் மகன் கணேசன் என்கிற ஆறுச்சாமி, மற்றும் வெள்ளியங்கிரி ஆகியோரின் வீடுகளுக்கு மத்தியில் 16 அடி அகலத்தில் உள்ள தடத்தின் வழியாக சென்று மேற்கண்ட தென்வடல் தடத்தை அடைந்தும் பின்னும் மேற்கண்ட ஹைறவேய்ஸ் ரோட்டிலிருந்து காந்திநாவிதன் வீட்டிற்கும் கொண்டம்பட்டி கந்தசாமிசெட்டியார் மகன் தெண்டபாணி வீட்டிற்கும் மத்தியில் உள்ள 16 அடி அகல புறம்போக்கு ஊராட்சிமன்ற தடத்தின் வழியாகசென்று மேற்கண்ட தென்வடல் தடத்தை அடைந்தும், பின்னும் பரமசிவம், கருப்புசாமி கவுண்டர் ஆகியோர் வீட்டிற்கு மத்தியில் அமனலிங்கேசுவரர் கோவிலுக்கு செல்ல உள்ள கிழமேல் தடத்தின் வழியாகவும் அதிலிருந்து வடக்கே செல்லும் ஆரம்ப சுகாதார நிலைய குடியிருப்புக்கு செல்லும் தடத்தின் வழியாகவும் ஜனங்கள், கால்நடை, வண்டி, லாரி, டிரேக்டர் டிரெய்லர் மற்றும் நவீன கனரக வாகனங்களும் போகவர உள்ள தடபாத்தியம் மாமூல்படியும் சகிதம்.

ஷை இடத்தில் கட்டிடங்கள் எதுவும் இல்லை. ஷை சொத்தின் நாயினல் மதிப்பு ரூ.100.00 பெறும்.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் ஷை இடம் நீலவர்ணம் தீட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளது.

S. [signature]

சாட்சிகள்:--------------------------------------------------

1. P. Kaliappan S/o. Peria Marimuthu gowder - Nambiamuthur Kongampatty (Pg. [illegible])

2. A. தெண்டபாணி S/o ஆறுமுகம் செட்டியார். [illegible]

ஆவணம் தயாரித்தவர்: L. Kannan (எல். கண்ணப்பன்) த/பெ இலட்சுமணமுதலியார்
சீலக்காம்பட்டி பொள்ளாச்சி (வட்டம்)
உரிமம் எண் பி 2597/டிஆர்பி/1984

தட்டச்சு செய்தவர்: M. Senthilkumar (எம். செந்தில்குமார்) த/பெ முருகவேல்
கோமங்கலம்புதூர் பொள்ளாச்சி (வட்டம்)
தட்டச்சு உரிமம் எண் ஏ208/டிஆர்பி/1995